# தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம்

## பதிவுரு எழுத்தர் மற்றும் ஓட்டுநர் பதவிகளுக்கான விளம்பர அறிவிக்கை

**அறிவிக்கை எண். 01/2020.** **நாள். 10.09.2020**

தொழிலாளர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாதுகாப்பு திட்டம்) அலுவலகங்களில் காலியாக உள்ள ஓட்டுநர் பணியிடங்கள் மற்றும் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய தலைமை அலுவலகம், தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாதுகாப்பு திட்டம்) அலுவலகங்கள் மற்றும் துயில் கூடங்களில் காலியாக உள்ள பதிவுரு எழுத்தர் பணியிடங்களை நிரப்புவதற்கு கீழ்கண்ட தகுதி உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | பதவியின் பெயர் | காலிப்பணிடங்களின் எண்ணிக்கை (தோராயமானது) | கல்வி மற்றும் தொழில்நுட்ப தகுதி |
|---|---|---|---|
| 1 | பதிவுரு எழுத்தர் | 37 | பத்தாம் வகுப்பு பயின்றிருக்க வேண்டும். (10th Completed) |
| 2 | ஓட்டுநர் | 32 | i. எட்டாம் வகுப்பு தேர்ச்சி (8th pass) அல்லது அதற்கு சமமான கல்வியில் தேர்ச்சி<br>ii. ஓட்டுநர் உரிமம் ( இலகு ரக(LMV) ஓட்டுநர் உரிமம் நாளது தேதி வரை புதுப்பிக்கப்பட்டது )<br>1. குறைந்தது இரண்டு வருடம் ஓட்டுநர் பணியில் முன் அனுபவம்<br>2. வாகன தொழில்நுட்பத்தில் தேர்ந்த அறிவு பெற்றிருத்தல் வேண்டும். |

**சம்பளம் ஏற்ற முறை**

பதிவுரு எழுத்தர் : 15900 - 50400

ஓட்டுநர் : 19500 – 62000

2. **காலிப்பணியிடங்களுக்கான பகிர்மானப்பட்டியல்**

இப்பணிக்காலியிடங்களுக்கு இடஒதுக்கீட்டு விதிகள் பொருந்தும், அரசாணையின்படி மாற்றுத் திறனாளிகளுக்கென 4% பணியிடங்கள் ஒதுக்கப்படும். (ஓட்டுநர் பணியை தவிர)

**பதிவுரு எழுத்தர்**

| Category | G | | W | | DW | | EX | | PSTM | | | | | | | | DIFFERENTLY ABLED | | | | TOTAL |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | G | | W | | DW | | Ex | | B/LV(W) | | LD (G) | | |
| | P | NP | P | NP | P | NP | P | NP | P | NP | P | NP | P | NP | P | NP | P | NP | P | NP | |
| GT | 2 | 2 | | 2 | | 1 | | 1 | 1 | 1 | | | | | | | | 1 | | | 11 |
| BC | 2 | 3 | | 2 | | 1 | | | | 1 | | | | | | | | | | | 9 |
| BC(M) | 1 | | | | | | | | | | | | | | | | | | | | 1 |
| MBC/DC | 2 | 2 | | 1 | | 1 | | | | 1 | | | | | | | | | | 1 | 8 |
| SC | 2 | 1 | | 1 | | 1 | | | | 1 | | | | | | | | | | | 6 |
| SC(A) | | | | | | | | | | 1 | | | 1 | | | | | | | | 2 |
| Total | 9 | 8 | 0 | 6 | 0 | 4 | 0 | 1 | 1 | 5 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 0 | 1 | 37 |

**ஓட்டுநர்**

| Category | G | | W | | DW | | EX | | PSTM | | | | | | | | TOTAL |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | G | | W | | DW | | Ex | | |
| | P | NP | P | NP | P | NP | P | NP | P | NP | P | NP | P | NP | P | NP | |
| GT | 2 | 2 | | 3 | | 1 | | 1 | | 1 | | | | | | | 10 |
| BC | 2 | 2 | | 2 | | 1 | | | | 1 | | | | | | | 8 |
| BC(M) | 1 | | | | | | | | | | | | | | | | 1 |
| MBC/DC | 2 | 1 | | 1 | | 1 | | | | 1 | | | | | | | 6 |
| SC | 1 | 1 | | 1 | | 1 | | | | 1 | | | | | | | 5 |
| SC(A) | | | | | | | | | | 1 | | | 1 | | | | 2 |
| Total | 8 | 6 | 0 | 7 | 0 | 4 | 0 | 1 | 0 | 5 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 | 32 |

## Abbreviation

| | |
|---|---|
| G | General |
| W | Women |
| DW | Destitute widow |
| EX | Ex-Service man |
| PSTM | Persons studied in Tamil Medium |

| | |
|---|---|
| GT | General Turn |
| BC | Backward Class |
| BC (M) | Backward Class (Muslim) |
| MBC/DC | Most Backward Class / Denotified Community |
| SC | Scheduled Caste |
| SC(A) | Scheduled Caste (Arunthathiyar) |
| ST | Scheduled Tribe |
| P | Priority |
| NP | Non Priority |

DIFFERENTLY ABLED

| | |
|---|---|
| B/LV | Blindness and Low vision |
| A | Autism, Intellectual Disability, Specific learning Disability and Mental illness/Multiple Disabilities |
| D/HH | Deaf and Hard of Hearing |
| LD | Locomotor Disability including Cerebral Palsy, Leprosy Cured, Dwarfism, Acid attack victims and Muscular Dystrophy |

| வ.எண் | விவரம் | அறிவிக்கை நாள் |
|---|---|---|
| 1 | அறிவிக்கை நாள் | 10.09.2020 |
| 2 | விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்குரிய கடைசி நாள் | 30.09.2020 |

## 3. விண்ணப்பிக்கும் முறை / கட்டணம்

https://labour.tn.gov.in/ என்ற இணையதளத்தில் குறிப்பிட்டுள்ள இணைப்பில் (link) உள்ள மேற்படி பதவிகளுக்குரிய விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து தேவையான விவரங்களை இணைத்து ரூ.500/–க்கான கட்டண தொகையை இணையதளம் மூலமாக செலுத்த வேண்டும். மாற்றுத்திறனாளிகள், ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்), பட்டியல் பழங்குடியினர் மற்றும் அனைத்து வகுப்புகளையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகளுக்கு ரூ.250/–க்கான கட்டண தொகையை செலுத்த வேண்டும். விண்ணப்பங்கள் பெறப்பட வேண்டிய கடைசி நாள்.30.09.2020 மாலை 5.45 மணி வரை, அதன் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

4. <u>தகுதிகள் – வயது வரம்பு</u> **01.07.2020 அன்றுள்ளபடி**

| வ. எண் | விண்ணப்பதாரர்களின் இன வகைகள் | குறைந்தபட்ச வயது (பூர்த்தியடைந்து இருக்க வேண்டும்) | அதிகபட்ச வயது (பூர்த்தியடைந்து இருக்க கூடாது) |
|---|---|---|---|
| 1. | ஆதி திராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்) பட்டியல் பழங்குடியினர் மற்றும் அனைத்து வகுப்புகளையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள். | 18 வயது | 35 வயது |
| 2. | பிற்படுத்தப்பட்ட வகுப்பு, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு / சீர் மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) | 18 வயது | 32 வயது |
| 3. | பிறவகையினர் | 18 வயது | 30 வயது |

<u>குறிப்பு :</u>

1. ஆதி திராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்), பட்டியல் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர் மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) ஆகிய வகைகளைச் சார்ந்தோர் மற்றும் அனைத்து வகுப்புகளையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் ஆகியோர் குறைந்தபட்ச பொதுக்கல்வித்தகுதியைக் காட்டிலும் மேற்பட்ட கல்வித்தகுதியைப் பெற்றிருப்பின் அதாவது பத்தாம் வகுப்பு/ மேல்நிலைப்பள்ளி/ பட்டயப்படிப்பு/ பட்டப்படிப்பு ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு உச்ச வயது வரம்பு இல்லை.

2. **மாற்றுத்திறனாளிகள்**: நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச வயது வரம்பிற்கு மேல் பத்தாண்டு வரை வயது வரம்பு சலுகை பெறத்தகுதியுடையவராவார்கள். (பதிவுரு எழுத்தர் பதவிக்கு மட்டும்)

3. **முன்னாள் இராணுவத்தினர் :**

   (அ) ஆதி திராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்), பட்டியல் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர் மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) ஆகிய பிரிவினைச் சார்ந்தவர்களுக்கு 53

வயது வரை சலுகை வழங்கப்படும். தவிர ஏனைய வகுப்பினைச் சார்ந்தவர்களுக்கு 48 வயது வரை சலுகை வழங்கப்படும்.

(ஆ) ஏற்கனவே, ஏதேனும் ஒரு பிரிவு / பணி / பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர், முன்னாள் இராணுவத்தினர் என்ற சலுகையைப் பெற முடியாது.

**5. தமிழ்மொழியில் தகுதி**

10.09.2020 நாளிட்ட அறிவிக்கையன்று விண்ணப்பதாரர்கள் போதுமான தமிழ் அறிவு பெற்றிருக்க வேண்டும்.

**6. தெரிவு செய்யும் முறை**

**(i.) ஓட்டுநர்:**

தேர்வு / நேர்முக தேர்வில் பெறும் மதிப்பெண்களின் அடிப்படையிலும் ஓட்டுநர் திறன் தேர்வின் அடிப்படையிலும் விண்ணப்பதாரர்களின் உத்தேசப்பட்டியல் இணையதளத்தில் வெளியிடப்படும். பின்னர், தகுதியான விண்ணப்பதாரர்கள் அவர்கள் சார்ந்த பிரிவு, காலிப்பணியிடங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களின் தரவரிசைப்படி தேர்வு செய்யப்படுவர். விண்ணப்பதாரர்கள் தேர்வு / நேர்முக தேர்வுக்கு, ஓட்டுநர் திறன் தேர்விற்கும், தங்களது சொந்த செலவில் வர வேண்டும்.

**(ii.) பதிவுரு எழுத்தர்:**

தேர்வு / நேர்முக தேர்வில் பெறும் மதிப்பெண்களின் அடிப்படையில் நேர்முகத்தேர்விற்கு வாரியத்தால் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களின் உத்தேசப்பட்டியல் பதவி வாரியாக தனித்தனியே இணையதளத்தில் வெளியிடப்படும். பின்னர், தகுதியான விண்ணப்பதாரர்கள் அவர்கள் சார்ந்த பிரிவு, காலிப்பணியிடங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களின் தரவரிசைப்படி பங்கேற்க அனுமதிக்கப்படுவர். விண்ணப்பதாரர்கள் தேர்வு / நேர்முக தேர்வுகளுக்கு, தங்களது சொந்த செலவில் வர வேண்டும்.

**7. பொதுவான தகவல்கள்**

A. அரசு ஆணை (நிலை) எண். 145, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள். 30.09.2010–இல் நேரடி நியமனத்தின் மூலம் நிரப்பப்பட உள்ள காலிப்பணியிடங்களில் 20% (சதவீதத்தை) பணியிடங்கள் நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதியினை தமிழ் வழியில்

பயின்றவர்களைக் கொண்டு முன்னுரிமையளித்து நிரப்ப அரசு ஆணையிட்டுள்ளது. தமிழ் வழியில் பயின்றவர்களுக்கான முன்னுரிமை அடிப்படையிலான 20% இடஒதுக்கீட்டு விதி இத்தெரிவிற்கு பொருந்தும். அரசு ஆணை (நிலை) எண். 40, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள். 30.04.2014–இல் தமிழ் வழியில் பயின்றவர்களுக்கான திருத்தி அமைக்கப்பட்ட இடஒதுக்கீட்டு வழிமுறைகள் விவரிக்கப்பட்டுள்ளன. அதன்படி தமிழ் வழியில் பயின்றவர்களுக்கான (PSTM) முன்னுரிமையைப் பெற விண்ணப்பதாரர்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித்தகுதியினை தமிழ்வழியில் பயின்று அதற்குரிய சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். மேலும், தமிழ்வழியில் பயின்ற விண்ணப்பதாரர்கள் இல்லாத நிலையில், முன்னுரிமைக்கென ஒதுக்கப்பட்ட காலிப்பணியிடங்கள் முன்னுரிமை நீக்கப்பட்டு பிற தகுதிகளைக் கொண்ட அந்தந்த வகுப்பினரைக் கொண்டு நிரப்பப்படும்.

B. அறிவிக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை தோரயமானதாகும். தெரிவு முடியும் வரை பணியிடங்களின் எண்ணிக்கை எந்த நேரத்திலும் மாறுதலுக்குட்பட்டதாகும்.

C. அரசு விதிகளின்படி, முன்னாள் இராணுவத்தினருக்கான இடஒதுக்கீடு இப்பதவிக்கு பொருந்தும். தெரிவு செய்யப்பட்ட தேர்ச்சியும் தகுதியும் வாய்ந்த போதிய முன்னாள் இராணுவத்தினர் கிடைக்கப்பெறாவிடில், அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட சுழற்சி முறையிலான இடங்கள் அதே வகுப்பினரை சார்ந்த பிற தகுதிகளை உடையோரைக் கொண்டு நிரப்பப்படும்.

D. அரசாணை (நிலை) எண். 21, மாற்றுத்திறனாளிகள் நலத் (DAP3-2) துறை, நாள்.30.05.2017–இன் படி மாற்றுத்திறனாளிகளுக்கென வகைப்படுத்தப்பட்ட இனங்களுக்கு 4% இடஒதுக்கீடு பொருந்தும். ஆகையால், மாற்றுத் திறனாளிகள் இத்தேர்விற்கு விண்ணப்பிக்கலாம். அவர்களுடைய விண்ணப்பங்கள் அரசின் ஆணைகளுக்குட்பட்டு ஏற்றுக்கொள்ளப்படும். (ஓட்டுநர் பணியிடம் தவிர)

E. மாற்றுத்திறனாளிகள் உடல் ஊனத்தின் தன்மை / ஊனத்தின் விழுக்காட்டளவு (%) குறித்த மருத்துவகுழு சான்றினை சமர்ப்பிக்க வேண்டும்.

F. **முன்னுரிமை கோரும் கீழ்கண்ட விண்ணப்பதாரர்கள் உரிய சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும் :**

i. இராணுவத்தில் உடல் ஊனமுற்றோர்
ii. இராணுவத்தில் இறந்தவரின் வாரிசுகள் / உடல் ஊனமுற்றவர்கள்
iii. இராணுவத்தில் பணிபுரிபவரின் வாரிசுகள்

iv. கலப்பு திருமணம் புரிந்தோர்
v. அரசுக்கு நிலம் வழங்கிய குடும்ப உறுப்பினர்கள்
vi. சுதந்திரப் போராட்ட தியாகிகளின் வாரிசுகள்
vii. மொழிப் போர் தியாகிகளின் வாரிசுகள்

G. தெரிவு செய்யப்பட்ட தேர்ச்சியும், தகுதியும் வாய்ந்த போதிய பெண் விண்ணப்பதாரர்கள் கிடைக்கப்பெறாவிடில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்கள் அதே வகுப்பினரை சார்ந்த தகுதிவாய்ந்த பிற விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

H. ஆதிதிராவிட (அருந்ததியர்) வகுப்பினர் முன்னுரிமை அடிப்படையில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் நிரப்பப்பட்ட பிறகும், அவ்வகுப்பினர்களில் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் இருப்பின் அவ்விண்ணப்பதாரர்கள், ஆதிதிராவிட வகுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடஒதுக்கீட்டிற்கு மதிப்பெண் தரவரிசைப்படி நிரப்பப்படுவர். அருந்ததியர்களுக்கென ஒதுக்கப்பட்ட பணியிடங்களுக்கு தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் கிடைக்கப்பெறாவிடில், அப்பணியிடங்கள் பிற ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்தவர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

I. இடஒதுக்கீடு குறித்த தவறான தகவல்கள் / தகுதிக்கான காரணிகளான வயது, வகுப்பு பிரிவுகள், கல்வித்தகுதி, உடற்தகுதி போன்ற அடிப்படைத் தகுதிகள் குறித்த தவறான தகவல் கொண்ட விண்ணப்பங்களும், முழுமையாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

J. மேற்கண்ட நியமனத்திற்கு தகுதியான நபர்களை தேர்வு செய்யவோ, நேர்காணலை ஒத்திவைக்கவோ, நியமன அறிக்கையை எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்யவோ செயலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளாகள் நல வாரியம் அவர்களுக்கு முழு அதிகாரம் உள்ளது. இத்துடன் தெரிவிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரையை தவறாது படித்து பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/——
**செயலாளர் (பொ)**